A.P.-...

Dom. 24-7-11

**HBDS**

Register Number

# 2011

# LAW — Paper IV

**( Tamil & English Versions )**

Duration : 3 Hours ] [ Max. Marks : 100

**( Tamil Version )**

*விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் :*

i) **பிரிவு 'அ'** விலிருந்து 10 வினாக்களுக்கும், **பிரிவு 'ஆ'** விலிருந்து 10 வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 5 மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

## பிரிவு - அ

## ( மைய அரசு சட்டங்கள் )

( மதிப்பெண்கள் : 10 × 5 = 50)

1. சட்டத்துடன் முரண்படும் இளஞ்சிறார் மீது இளஞ்சிறார் நீதிக் குழுமம் பிறப்பிக்கும் ஆணைகள் யாவை ?

2. மனநலச் சட்டம், 1987-ன் கீழ் மனநலமிலார் மீது காவல் அலுவலருக்குரிய கடமைகள் மற்றும் அதிகாரங்கள் குறித்துப் பகுப்பாய்வு செய்க.

3. தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 இல் கூறப்பட்டுள்ள பொருளுரை சொற்றொடர்களாகிய 'கணினி' மற்றும் 'எண்சார் கையொப்பம்' ஆகியவற்றை வரையறு.

4. மனித உறுப்புக்களை பெயர்த்து பொருத்தும் சட்டம், 1994 ன் கீழ் மனித உறுப்புக்களை அகற்றுவதற்கும் மற்றும் பெயர்த்துப் பொருத்துவதற்கும் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை எடுத்தியம்புக.

5. சிறைஞர்களை அடையாளம் காட்டும் சட்டம், 1920 ன் தலையாய சிறப்பியல்புகளை எடுத்துரைக்க.

6. நாட்டு நன்மதிப்பிற்கு இழிவுபடுத்துவதை தடையுறுத்தும் சட்டம், 1971-ன் கீழ் இந்திய நாட்டுக் கொடிக்கு அவமதிப்பூட்டும் செயல்கள் யாவை ?

7. குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தண்டனைக்குரிய சமூக முட்டுப்பாடுகளை எடுத்துரைக்க.

8. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955 ன் கீழ் இன்றியமையாப் பண்டத்தைப் பறிமுதல் செய்த பின்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விவரிக்க.

9. நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டம், 1958 ன் கீழ் செயலாற்றும் நன்னடத்தை அலுவலரின் கடமைகள் குறித்து ஆய்வு செய்க.

10. மின்சாரச் சட்டம், 2003 ன் கீழ் கூறப்பட்டுள்ள செயல்கள் எப்போது மின்சார திருட்டாக அமையப் பெறுகின்றன என்பது பற்றிக் கூர்ந்தாய்வு செய்க.

11. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியலினர் ( வன்கொடுமைத் தடுப்பு ) சட்டம், 1989 ன் கீழ் ஒருவர் குற்றஞ்சாட்டப்படுமிடத்து, எதிர்நோக்கு பிணை மற்றும் நன்னடத்தைக் கண்காணிப்புக் குறித்த குறிப்பொன்று எழுதுக.

12. உணவுக் கலப்பட தடைச் சட்டம், 1954 ன் கீழ் வழக்கிடும்போது அனுமதிக்கத்தக்க அல்லது அனுமதிக்கத் தகா எதிர்வாதங்கள் குறித்து பகுப்பாய்வு செய்க.

## பிரிவு - ஆ
## (தமிழ்நாடு மாநிலச் சட்டங்கள்)

(மதிப்பெண்கள் : 10 × 5 = 50)

13. பொது இடங்களில் குடிபோதைக்கு உட்பட்டிருந்தாலோ, கலாட்டா செய்தாலோ அல்லது அநாகரீக நடத்தையில் ஈடுபட்டாலோ மற்றும் அனுமதியின்றி ஒலிபெருக்கிகளை எப்பகுதியிலேனும் பயன்படுத்தி குற்றம் புரியுமிடத்து தமிழ்நாடு மாநகர காவல் சட்டம், 1888 ன் கீழ் இணைப்பாக்கச் செய்யப்பட்டுள்ள தண்டனை வகையங்களை ஆய்வு செய்க.

14. தமிழ்நாடு கள்ளச் சாராயக் குற்றவாளிகள், மருந்து சரக்கு குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரது அபாயகரமானச் செயல்களை தடுத்தல் சட்டம், 1982 ல் கூறப்பட்டுள்ள 'கள்ளச் சாராயக் குற்றவாளி', 'மருந்து சரக்கு குற்றவாளி' மற்றும் 'நில ஆக்கிரமிப்பாளர்' ஆகிய பொருளுரை சொற்றொடர்களை வரையறு.

15. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 ன் கீழ் எப்போது மது வகை அல்லது மதிமயக்கம் மருந்தினை தயாரிக்க, எடுத்துச் செல்ல, வைத்திருக்க அல்லது அதனை அருந்துவதற்கு தடை விதிக்கிறது ?

16. தமிழ்நாடு சூதாட்டச் சட்டம், 1930 ன் கீழ் இழைக்கும் குற்றங்கள் பற்றிய துணிபினை ஆய்வு செய்க.

17. தமிழ்நாடு நிதிநிறுவன வைப்பீட்டாளர் பாதுகாப்புச் சட்டம், 1997 ன் கீழ் அமைக்கப்பட்ட தனி நீதிமன்றத்தின் அதிகாரங்களாகிய பற்றுகை, விற்பனை தொகைமீட்டல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை விவரித்துரைக்க.

18. தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் மற்றும் பணச் சுழற்சித் திட்டங்கள் ( தடுக்கும் ) சட்டம், 1978 ன் கீழ் நிதி நிறுமங்களால் செய்யும் குற்றங்களுக்கு பொறுப்புடையவர்கள் யாவர் ?

19. தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவு கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவைகளின் வாயிலாக தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்களை திரையிடுதல் ( முறைப்படுத்துதல் ) விதிகள், 1984-ன் கீழ், மேல்முறையீடு மற்றும் சீராய்வு தொடருங்கால் கையாளப்படும் நடைமுறைகளை விவாதிக்க.

20. தமிழ்நாடு பரிசுத்திட்டங்கள் ( தடை ) சட்டம் 1979-ன் கீழ் குறிக்கப்பட்டுள்ள திட்டங்களுடன் தொடர்புடைய வேறு குற்றங்களையும் அதற்குரிய தண்டனைகள் குறித்தும் கூர்ந்தாய்வு செய்க.

21. தமிழ்நாடு சொத்து ( சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல் ) சட்டம், 1992-னை இயற்றுவதற்கான நோக்கம் மற்றும் அதன் காரணங்களைச் சுட்டிக் காட்டுக.

22. தமிழ்நாடு வனச்சட்டம், 1882 கீழ் இழைக்கப்படும் குற்றம் தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளும்போது வன அலுவலர்களது அதிகாரங்களை ஆய்வு செய்க.

23. தமிழ்நாடு திறந்த வெளிகள் ( அழகழிக்கும் தடையுறுத்தும் ) சட்டம் 1959 ன் கீழ் 'மறுப்புக்குரிய விளம்பரங்கள்' மற்றும் 'அனுமதிபெறா விளம்பரங்கள்' குறித்து தாங்கள் அறிவதென்ன ?

24. பகடிவதை தடுப்புச் சட்டம் 1997 ன் கீழ் கல்வி நிறுவனம் ஒன்றில் பயிலும் மாணவரை எப்போது கல்வி நிறுவனத்திலிருந்து இடைநீக்கம் மற்றும் நிரந்தர நீக்கம் செய்ய முடியும் ?

## ( English Version )

*Instructions to the Candidates :*

i) Answer 10 questions from **Section – A** and 10 questions from **Section – B**.

ii) Each question carries 5 marks.

iii) The answer for each question should not exceed 100 words.

## SECTION – A

### ( CENTRAL ACTS )

( Marks : 10 × 5 = 50 )

1. What are the orders that may be passed by the Juvenile Justice Board regarding juvenile in conflict with law ?

2. Analyse the powers and duties of a police officer in respect of mentally ill person under Mental Health Act, 1987.

3. Define 'Computer' and 'Digital Signature' under Information Technology Act, 2000.

4. State the restrictions prescribed on removal and transplantation of human organs under the Transplantation of Human Organs Act, 1994.

5. Enumerate the salient features of Identification of Prisoners Act, 1920.

6. What are the acts which constitute disrespect to Indian National Flag under prevention of Insults to National Honour Act, 1971 ?

7. Enumerate the social disabilities punishable under the Protection of Civil Rights Act, 1955.

8. Explain the procedures to be followed after confiscation of Essential Commodity under Essential Commodities Act, 1955.

9. Examine the duties of probation officers functioning under the Probation of Offenders Act, 1958.

10. Scrutinise the various acts which are constituted as theft of electricity under Electricity Act, 2003.

11. Write a note on anticipatory bail and probation in respect of persons accused of having committed an offence under Scheduled Castes and Scheduled Tribes ( Prevention of Atrocities ) Act, 1989.

12. Analyse the defence which may or may not be allowed in prosecutions under Prevention of Food Adulteration Act, 1954.

## SECTION – B

## ( TAMIL NADU STATE ACTS )

( Marks : $10 \times 5 = 50$ )

13. Examine the penal provisions which are incorporated under the Tamil Nadu City Police Act, 1888 for drunkenness or riotous or indecent behaviour in public places and unauthorised use of sound amplifiers.

14. Define the terms 'bootlegger', 'drug offender' and 'slum-grabber' under Tamil Nadu Prevention of Dangerous Activities of Bootleggers, Drug Offenders, Slum Grabbers Act, 1982.

15. When does the Tamil Nadu Prohibition Act, 1937 prohibit the manufacture of, trafficking, possession and consumption of liquor and intoxicating drugs ?

16. Examine the presumption of offences which are committed under the Tamil Nadu Gaming Act, 1930.

17. Enumerate the powers of special court which are constituted under the Tamil Nadu Protection of Interests of Depositors ( in Financial Establishment ) Act, 1997 regarding attachment, sale realisation and distribution.

18. Who are liable for the offences committed by companies under the Tamil Nadu Prize Chits and Money Circulation Schemes ( Banning ) Act, 1978 ?

19. Discuss the procedures to be adopted in case of an appeal and revision under the Tamil Nadu Exhibition of Films on Television Screen through Video Cassette Recorder and Cable Television Network ( Regulation ) Rules, 1984.

20. Scrutinise the other offences mentioned in connection with prize schemes and the penality prescribed for the same under the Tamil Nadu Prize Schemes ( Prohibition ) Act, 1979.

21. Elucidate the objects and reason for the enactment of Tamil Nadu Property ( Prevention of Damage and Loss ) Act, 1992.

22. Examine the powers of forest officers in respect of investigation of forest offences under the Tamil Nadu Forest Act, 1882.

23. What do you understand about 'objectionable advertisement' and 'unauthorised advertisement' under the Tamil Nadu Open Places ( Prevention of Disfigurement ) Act, 1959 ?

24. When can a student studying from an educational institution be suspended and dismissed under the Tamil Nadu Prohibition of Ragging Act, 1997 ?